# புதுச்சேரியில் துறைவாரியான காலநிலை அபாய மதிப்பீட்டு செயலி வெளியீடு

புதுச்சேரி, ஏப்.22–

புதுச்சேரி பிரதேசத்திற்கான துறை வாரியான காலநிலை பாதிப்பு அபாயங்களை இணைய வழி மதிப்பீடு செய்யும் காலநிலை அபாய மதிப்பீட்டு செயலி வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடந்தது.

புதுச்சேரி அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் கீழ் செயல்படும் புதுச்சேரி காலநிலை மாற்ற குழு, பெங்களூரில் உள்ள அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கொள்கை ஆய்வுக்கான மையத்துடன் இணைந்து புதுச்சேரி பிரதேசத்திற்கான துறை வாரியான காலநிலை பாதிப்பு அபாயங்களை இணைய வழி மதிப்பீடு செய்யும் கால நிலை அபாய மதிப்பீட்டு செயலி வெளியீட்டு நிகழ்ச்சி நேற்று நடந்தது.

இச்செயலில் சர்வதேச காலநிலை மாற்ற குழு வெளியிட்ட ஐந்தாவது மதிப்பீட்டு அறிக்கை அடிப்படையிலான அபாய மதிப்பீட்டு வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இது விவசாயம், நீர் வளங்கள், மீன்வளம், கால்நடை, சுகாதாரம், சுற்றுலா மற்றும் நகரமைப்பு மூலதன வசதிகள் போன்ற துறைகளில் காலநிலை மாற்றம் சார்ந்த பாதிப்புகளின் அடிப்படையில் உருவாகக்கூடிய அபாயங்களை பகுத்தறிய வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த செயலி காலநிலை மற்றும் எதிர்கால அபாயங்களை பயனர்கள் பார்வையிட்டு மதிப்பீடு செய்ய உதவுகிறது. மேலும் இந்திய அளவில் இந்த காலநிலை அபாய மதிப்பீட்டு செயலி ஒரு முதன்மையாக முயற்சியாகும். இந்த செயலிக்கான வெளியீட்டு நிகழ்ச்சி மற்றும் பயிலரங்கம் நேற்று புதுச்சேரி ஓட்டல் அதிதியில் நேற்று நடந்தது.

நிகழ்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை சிறப்பு செயலர் மற்றும் இயக்குனர் யாசம் லஷ்மி நாராயண ரெட்டி, சுற்றுச்சூழல் ஆணையர் ஆஷிஷ் மாதவராவ் ஆகியோர். செயலியை வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் துறையின் அதிகாரிகள் ரமேஷ், சகாயா, காளமேகம், இந்து மூர்த்தி, அனுசுயா, மற்றும் அதிகாரிகள், விஞ்ஞானிகள், பல்வேறு அரசுத்துறை அதிகாரிகள் ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




■ புதுச்சேரி அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் சார்பில் அதிதி ஓட்டலில் நடந்த நிகழ்ச்சியில் காலநிலை அபாயம் மதிப்பீட்டு கருவி செயலியை சிறப்பு செயலர் யாசம் லட்சுமி நாராயண ரெட்டி, சுற்றுச்சூழல் கமிஷ்னர் ஆஷிஷ் மாதவராவ் ஆகியோர் வெளியிட்டனர்.

தினமலர் dt: 22.04.2025